இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, உரத்தை ஒழுங்குபடுத்தற் சட்டம்

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, உரத்தை ஒழுங்குபடுத்தற் சட்டம்

[1988, திசெம்பர் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 31/86

உரத்தை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல் வருத்தமைத்தல் அத்துடன் விநியோகம் செய்தல், என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, உரத்தை ஒழுங்குபடுத்தற் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "நியமனத் தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**உர இறக்குமதி உற்பத்தி, அத்துடன் வருத்தமைத்தல் என்பன உரிமமளிக்கப்படவேண்டும்.**

2. (1) ஆளெவரும் நியமனத் தேதியிலிருந்து, மூன்று மாதங்கள் முடிவுற்ற பின்னர், இச்சட்டத்தின்கீழ் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய உரச் செயலகப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழின்றியும், அவ்வுரிமத்தின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கவன்றி வேறு வகையிலும் தவிர உரத்தை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், அல்லது வருத்தமைத்தலாகாது.

(2) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொவ்வொன்றும், இச்சட்டத்தின் எடுத்துக் காட்டப்பட்டுள்ள அந்தந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவானதாதல் வேண்டும்.

**உர மதியுரைக் குழு.**

3. (1) அமைச்சரால் நியமிக்கப்பட்ட உர மதியுரைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) உர மதியுரைக் குழுவுக்குச் சட்டத்தின் நிருவாகம் தொடர்பாக காலத்திற்குக் காலம் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் அமுல்படுத்தக்கூடியவாறான அத்தகைய கருமங்கள் மீது பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குதல் அதன் கடமையாதல் வேண்டும்.

**அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.**

4. இச்சட்டத்தின் நிருவாகத்தில் அவசியமெனக் கருதப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கப்படலாம்.

**பணிப்பாளரின் தத்துவங்களைக் கையளித்தல்.**

5. (1) இச்சட்டத்தின் கீழ் பணிப்பாளரானவர், தமது தத்துவங்களுள் எதனையும் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம்.

(2) எந்த அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்பாளரின் தத்துவங்களுள் எதுவும் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அலுவலர் அல்லது சேவையாளர், அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களை, பணிப்பாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாகப் பிரயோகித்தல் வேண்டும்.

2—எ 103540—2,935 (05/88)

உரிமத்திற்கான விண்ணப்பம்.

6. (1) உரத்தை இறக்குமதி செய்வதற்கான, உற்பத்தி செய்வதற்கான அல்லது வகுத்தமைப்பதற்கான உரிமமொன்றிற்கான விண்ணப்பமொவ்வொன்றும், விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் சேர்த்தும் பணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஒரு ம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொவ்வொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டதன்மேல், பணிப்பாளரானவர், ஒன்றில் உரிமமொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அத்தகைய விண்ணப்பகாரருக்கு விண்ணப்பமொன்றை வழங்க மறுப்பதற்கான காரணங்கள் பதியப்படவேண்டும்.

உரிமத்தின் படிவமும் கால நீட்சியும்.

7. இச் சட்டத்தின் கீழான உரிமமொவ்வொன்றும் :

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் ; அத்துடன்

(ஆ) முன்னரே அது இல்லாதாக்கப்பட்டாலன்றி, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டுமாத காலப்பகுதியொன்றுக்கு வலுவிலும் இருத்தல் வேண்டும்.

உரிமத்தைப் புதுப்பித்தல்.

8. உரிமம் முடிவுறுவதற்கு, முன்பு முப்பதுக்குக் குறையாத நாட்களுக்குள்ளாக, பணிப்பாளருக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது :—

(அ) பணிப்பாளரானவர் உரிமமானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளையும் அனுசரித்துள்ளதெனவும், இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளின் கீழ் தவறெதற்கும் குற்றத்தீர்ப்பளிக்கப்படவில்லை எனவும் திருத்திப்பட்டால், அத்துடன்

(ஆ) உரிமம் பெற்றவர் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைக் கொடுத்துமிருந்தால் ;

உரிமமானது ஒரு தடவையில் பணிப்பாளரினல் ஓராண்டை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்கு அல்லது காலப்பகுதிகளுக்குப் புதுப்பிக்கப்படலாம்.

உரிமத்தை இல்லாதாக்குதல்.

9. (1) உரிமம் பெற்றவர்

(i) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அத்தகைய உரிமத்துடன் இணைக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகளை அல்லது நியதிகளை மீறியுள்ளாரென ; அல்லது

(ii) இச்சட்டத்தின் கீழ் தவறென்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென பணிப்பாளர் திருத்திப்பட்டால் அவர் இச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாததாக்கலாம்

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்றை இல்லாதாக்குதலானது, பணிப்பாளரின் முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான காலம் வரை, அல்லது உரியகாலத்தினுள் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தால் அம் மேன்முறையீடானது அனுமதிக்கப்படாவிட்டாலன்றியும் அந்நுடன் அனுமதிக்கப்படாதுவிடும் வரை பயனுறுதலாகாது.

10. (1) பணிப்பாளரானவர், உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிக்க மறுப்பதற்கு முடிபு செய்யுமிடத்து, பணிப்பாளரானவர் விடயத்துக்கேற்றவாறு விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம் பெற்றவருக்குத் தமது முடிபை அதற்கான காரணங்களுடன் சேர்த்து பதிவஞ்சல் மூலம் தெரியப்படுத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் தமது முடிபை விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம் பெற்றவருக்கு அதற்கான காரணங்களையும் சேர்த்துத் தெரியப்படுத்தல் வேண்டும்.**

(2) இப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம் பெற்றவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட முடிபு எதுவும், அத்தகைய விண்ணப்பகாரரின் அல்லது உரிமம் பெற்றவரின் வழமையான தொழிலிடத்திற்கு அல்லது வதிவிடத்திற்குப் பதிவஞ்சல் மூலம் அத்தகைய தகவல் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட இரண்டு நாட் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் தெரிவிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

11. (1) விடயத்துக்கேற்ப எந்த விண்ணப்பகாரர் அல்லது உரிமம் பெற்றவர்—

**மேன்முறையீடுகள்.**

(அ) ஓர் உரிமத்தை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கின்றதான ; அல்லது

(ஆ) அவரது உரிமத்தை இல்லாதாக்குகின்றதான

10 ஆம் பிரிவின்கீழான பணிப்பாளரின் முடிபொன்றினால் இன்னலுறுகின்றாரோ அந்த விண்ணப்பதாரர் அல்லது உரிமம்பெற்றவர் எந்தத் தேதியில் அவருக்கு அம் முடிபு தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) அமைச்சரின் அமைச்சுச் செயலாளரானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழான மேன்முறையீடொன்றின் மீது :—

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து, உரிமமொன்றினை வழங்கும்படி அல்லது புதுப்பிக்கும்படி பணிப்பாளரைப் பணிக்கலாம் ; அல்லது

(ஆ) மேன்முறையீட்டை அனுமதிக்காதுவிடலாம்.

(3) பணிப்பாளரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரால் அவருக்கு வழங்கப்பட்ட பணிப்பு எதனுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகள் எவற்றின் கீழும் உரிமமொன்றிற்காக அல்லது உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்காக ஒரு விண்ணப்பம் ஆற்றப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, பணிப்பாளரானவர் விடயத்திற்கேற்றூற்போன்று அத்தகைய விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம் பெறுநருக்கு அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்பட்ட கட்டணத்தை மீளளிப்புச் செய்தல் வேண்டும்.

பணிப்பாளரின் தத்துவங்கள்.

12. (1) பணிப்பாளரானவர், பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) எந்த இடத்தில் உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவென, வகுத்தமைக்கப்படுகின்றனவென, களஞ்சியப்படுத்தப்படுகின்றனவென அல்லது விநியோகிக்கப்படுகின்றனவென நம்புகின்றாரோ அந்த இடம் எதனுள்ளும், எந்த நேரத்திலும் நுழைவதற்கும், ஏதேனும் சாதனத்தை, களஞ்சிய வசதிகளை, மூலப் பொருள்களை அத்துடன் அதனகத்துக் காணப்படும் செய்து முடிக்கப்பட்ட விளைபொருள்களைப் பரிசோதனை செய்வதற்கு ;

(ஆ) ஏதேனும் வாகனத்தை நிறுத்தி அதில் ஏறி, அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அதன்மீதான நுண்ணாய்வுகளைச் செய்வதற்கு ;

(இ) அவரது சொந்தப் பிரேரணை மீது, அல்லது ஆளெவரினாலும் எழுத்தில் செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டை அல்லது வேண்டுகோளைப் பெற்றுக்கொண்டதன்மேல், உற்பத்தி செய்யும், வகுத்தமைக்கும், களஞ்சியப்படுத்தும் அல்லது விநியோகிக்கும் இடமெதிலும் அல்லது ஏதேனும் வாகனத்தின்மீது காணப்படும் ஏதேனும் உரவகையிலிருந்து பகுப்பாய்வுக்காக மாதிரிகளை எடுப்பதற்கும் ; பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடமொன்றில், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உரத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கெனப் பணிப்பாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் அத்தகைய மாதிரிகளை விதித்துரைக்கப்பட்ட விதத்தில் பகுப்பாய்வு செய்யச் செய்விப்பதற்கும் ;

(ஈ) பிரிவு 15 (1) என்பதன் ஏற்பாடுகளுக்கு மாறாகக் கலப்படம் செய்யப்பட்டிருப்பதாகக் காணப்பட்ட உரமெதனையும் கைப்பற்றி தடுத்து வைப்பதற்கும் ; அத்துடன்

(உ) எவரேனும் உர இறக்குமதியாளரை, உற்பத்தியாளரை, வகுத்தமைப்போரை அல்லது விநியோகித்தோரை, இச்சட்டத்தின் கீழ் அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவலையும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அவருக்குக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துவதற்கும்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக பகுப்பாய்வுக்கு மாதிரிகளை எடுப்பதற்கான முறையானது 1982 ஆம் ஆண்டின் 559 ஆம் இலக்க இலங்கை நியமங்களிலும் ந. அ. ச. 631. 8 : 620. 113 ஆம் தரப்பட்டிருப்பதும் 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்டதுமான உரத்தை மாதிரி செய்வதற்கான முறையாதல் ஆகும்.

(3) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் அறிவித்தலொன்றின் மூலம் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுதற்குத் தேவைப்படும் ஆளெவரும் வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய தகவலை வெளியிடுவதினின்று தடைசெய்யப்பட்டிருக்குமிடத்தன்றி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டிருக்க வேண்டியவாறு அத்தகைய காலத்திற்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுக வேண்டுவது அவரது கடமையாதல் வேண்டும்.

13. ஆளெவரும், ஏதேனும் உரத்தை அல்லது உரக் கலவையை— உரத்தை விநியோகித்தல்.

(அ) (i) கிழியாததான வெடிக்காததான அல்லது ஒரு பாகம் விழுந்திருக்காததான நியாயமான கைபிடியைத் தாங்கக்கூடிய;

(ii) அத்தகைய பொதியின் அல்லது கொள்கலனில் உள்ள கொள்பொருள்களின் உருச் சிர்கேட்டைத் தடுக்கக்கூடிய அத்தகைய பொதியில் அல்லது கொள்கலனில் அல்லது பொதியிலிருந்து அல்லது கொள்கலனிலிருந்து தவிர;

(ஆ) அத்தகைய பொதி அல்லது கொள்கலன் பின்வரும் விவரங்களைக் கொண்டதான சுட்டுத் துண்டொன்றை அதன்மீது ஒட்டப்பெற்று அல்லது அச்சிடப்பெற்று இருந்தாலன்றி—

(i) இனப் பெயரும் அல்லது உற்பத்தியாளரின் அல்லது வகுத்தமைப்போரின் பெயர்;

(ii) அத்தகைய பொதியின் அல்லது கொள்கலனின் கொள்பொருளின் தேறிய நிறை; அத்துடன்

(iii) அத்தகைய உரத்திலுள்ள ஆக்கக்கூறுகள், ஊட்டச்சத்து நூற்றுவீதம் என்பன தொடர்பிலான அத்தகைய தகவல்;

(இ) பொதிக்கு அல்லது கொள்கலனுக்கு ஒட்டப்பட்ட சுட்டுத்துண்டின் கொடுக்கப்பட்ட தகவல் கொள்பொருட்களுடன் இசைந்திருந்தாலன்றி;

(ஈ) உற்பத்தியாளரின் அல்லது வகுத்தமைப்பவரின் முகவரி பற்றித் தெரிந்தும், அத்துடன் பணிப்பாளரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அத்தகைய தகவலைக் கிடைக்கச் செய்யும் நிலைமையிலும் இருந்தாலன்றி;

(உ) பொதிக்கு அல்லது கொள்கலனுக்கு ஒட்டப்பட்ட சுட்டுத்துண்டின் மீது அத்தகைய உரத்தின் வகையையும் விலையையும் சுட்டிக் காட்டியிருந்தாலன்றி; அத்துடன்

(ஊ) உரமானது, நல்ல உருப்படியான நிலைமையிலும் இருந்தாலன்றி விநியோகித்தலோ அல்லது விநியோகிப்பதற்கு முனைதலோ ஆகாது.

உரத்தை விநியோகிப்பதற்கு மறுத்தல்.

14. (1) ஏதேனும் உரத்தை தமது உடைமையில் வைத்திருக்கின்றவரான உர விநியோகத்தர் எவரும் அத்தகைய உரத்தை விநியோகிக்க மறுத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ், தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்கில் பின்வருவனவற்றை எண்பித்தல் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் போதுமானதோர் எதிர்வாதமானதாதல் வேண்டும்.

(அ) கேள்வியிலான தருணத்தில் நியாயமான அளவு உரத்தை வழங்கியுள்ளார் அல்லது கேட்டகப்பட்ட அளவினை வழங்கீடு செய்வதற்கு போதியளவு உரம் அவரது உடைமையில் இருக்கவில்லை; அல்லது

(ஆ) கேள்வியிலான தருணத்தில் உர விநியோகமானது இந்த அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானதாக இருந்திருக்கும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காகப் போதுமான அளவு என்பதைத் தீர்மானிக்கையில், விநியோகத்தரின் அல்லது அவரது வீட்டு உறுப்பினர்களின் கமத்தொழில் பொறுப்பு முயற்சிக்குத் தேவைப்படும் அத்தகைய உரத்தின் அளவு கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

கலந்திளக்கப்பட்ட உரத்தின் விநியோகத்தைத் தடைசெய்தல்.

15. (1) (அ) உர விநியோகத்தர் எவரும், கலந்திள்க்கப்பட்டதான உரமெதனையும் விநியோகித்தலோ விநியோகிக்க முனைதலோ ஆகாது.

(ஆ) ஏற்றியிறக்குநரெவரும் அவரது உட்கையுடனே அல்லது அறிந்து கொண்டோ கலந்திளக்கப்பட்ட உரத்தை ஏற்றியிறக்குதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்காக உரமானது பின்வருமாறு இருப்பின் கலந்திளக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்—

(அ) எந்தப் பயிருக்கு அது ஏற்புடைத்தாக்கப்பட வேண்டுமென முன்னைப்பட்டதோ அந்தப் பயிருக்குத் தீமைபயப்பதான தீங்கு விளைக்கும் போதியளவினவான ஆக்கக் கூறுகளெவற்றையும் அது கொண்டிருந்தால்; அல்லது

(ஆ) அதன் சேர்க்கையானது உரத்தைக் கொண்டிருக்கும் பொதியில் அல்லது கொள்கலனில் ஒட்டப்பட்டிருக்கும் சுட்டுத்துண்டானது கொண்டிருக்க வேண்டுமெனக் கருதப்படும் சேர்க்கையைவிடக் குறைவானதாக அல்லது வித்தியாசமாக இருந்தால்,

(3) இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கான ஒரு குற்றவழக்கில், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக உரத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கென, பணிப்பாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் கைப்பட வழங்கப்பட்டதான எந்த உரம் தொடர்பாக சார்த்தப்பட்ட தவறு புரியப்பட்டதோ அந்த உரத்தின் ஆக்கக் கூறுகளை அல்லது சேர்க்கையை குறிப்பிடுகின்ற தாள் சான்றிதலொன்று அதனகத்து செய்யப்பட்ட கூற்றுகளின் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

கலப்படம் செய்யப்பட்ட உரத்தை பறிமுதல் செய்தலும் தடுத்து வைத்தலும்.

16. (1) பணிப்பாளர் எவர், 5 ஆம் பிரிவின் கீழ் அவரது தத்துவங்களை எந்த அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளித்துள்ளாரோ அந்த எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் எந்தக் கலப்படம் செய்யப்பட்ட உரத்தின் மூலம் அல்லது எந்தக் கலப்படம் செய்யப்பட்ட உரம் தொடர்பில் 15(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதாக அவர் நம்புகின்றாரோ அந்தக் கலப்படம் செய்யப்பட்ட ஏதேனும் உரத்தை அவசியப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பறிமுதல் செய்து தடுத்து வைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் உரம அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் விருப்பத்தின்பேரில், அது பறிமுதல் செய்யப்பட்ட இடத்தில் அல்லது கட்டிடத்தில் வைக்கப்படலாம் அல்லது களஞ்சியப்படுத்தப்படலாம் அல்லது அவரது தற்றுணிபின் பேரில் வேறு ஏதேனும் இடத்துக்கு அப்புறப்படுத்தப்படலாம்.

(3) அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் பறிமுதல் பற்றி உடனடியாக பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

பகுப்பாய்வு.

17. (1) பதினாறும் பிரிவின் கீழ் உரத்தைப் பறிமுதல் செய்யும் அலுவலர் அல்லது சேவையாளர் அவரால் அவ்விதம் பறிமுதல் செய்யப்பட்ட உரத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது அவரால் எடுக்கப்பட்ட ஏதேனும் மாதிரியை பகுப்பாய்வுக்கென அல்லது பரிசோதனைக்கென அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளரொருவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் இச்சட்டத்தின் கீழ் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உரத்தைப் பகுப்பாய்வு அல்லது பரிசோதனை செய்துள்ளவிடத்து அவர் பணிப்பாளருக்கு ஒரு சான்றிதழை அல்லது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய சான்றிதழில் அல்லது அறிக்கையில் அவரது பகுப்பாய்வின் அல்லது பரிசோதனையின் பெறுபேற்றைத் தருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளர், (1) ஆம் உட்பிரிவின் குறிப்பிடு செய்யப்பட்ட பகுப்பாய்வை அல்லது பரிசோதனையை மேற்கொள்வதற்கு பணிப்பாளரால் எழுத்தில் அங்கீகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவராக இருத்தல் வேண்டும்.

இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் வகுத்தமைப்போர் அல்லது விநியோகத்தர் தவிர்ந்த வேறு ஆட்களால் தேவைகளுக்கதிகமான உரம் உடைமையில் வைத்திருக்கப்படுதலைத் தடைசெய்தல்.

18. உர இறக்குமதியாளர், உற்பத்தியாளர், வகுத்தமைப்போர் அல்லது விநியோகித்தர் ஒருவர் தவிர்ந்த ஆளெவரும் அவரால் அல்லது அவரின் சார்பில் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது பயிரிடப்படும் காணிகள் மீது அத்தகைய ஆளின் ஓராண்டுக்குரிய பயன்பாட்டுக்கான தேவைகளுக்கதிகமாக எந்த அளவினதான உரத்தையும் தமதுடைமையில் வைத்திருத்தலாகாது.

உரத்தை வகுத்தமைத்தல்.

19. உரத்தை வகுத்தமைத்தலில் ஈடுபட்டிருக்கும் ஆளொவ்வொருவரும் அத்தகைய கலவைகளின் சேர்க்கைக்காக பணிப்பாளரின் எழுத்திலான அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

உரத்தைப் பகுப்பாய்வு செய்தலில் பிரயோகிக்கப்படவேண்டிய நியமங்கள்

20. இச் சட்டத்தின் கீழான உரப்பகுப்பாய்வில் ஏற்புடைத்தாக்கப்படவேண்டிய நியமங்கள், 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை நியமங்கள் நிறுவனங்களின் நியமங்களாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நியமங்கள் இல்லாதவிடத்து ஐக்கியஇராச்சியத்தின் கடைப்பிடிக்கப்படும் நேரொத்த நியமங்கள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

21. எந்த ஆள்—

(அ) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையாக ஏதேனும் உரத்தை இறக்குமதி செய்கின்றாரோ, உற்பத்தி செய்கின்றாரோ, அல்லது வகுத்தமைக்கின்றாரோ ;

(ஆ) பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) (ஈ) என்னும் பந்திகளின் கீழான பணிப்பாளரின் தத்துவங்களை அவர் பிரயோகிக்கையில் தடங்கலாக உள்ளாரோ அல்லது முட்டுக்கட்டையிடுகின்றாரோ ;

(இ) பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (2) என்னும் பிரிவின் கீழ் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்பட்டபோது அத்தகைய தகவல் பொய்யானது எனத் தெரிந்து கொண்டே ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுகின்றாரோ ;

(ஈ) நியாயமான ஏதுவின்றி, 12 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றாரோ ;

(உ) பதின்மூன்றும் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையாக ஏதேனும் உரத்தை விநியோகிக்கின்றாரோ அல்லது விநியோகிக்க முனைகின்றாரோ;

(ஊ) பதினான்காம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையாக உர விநியோகத்தர் என்ற தன்மையில் அவரது உடைமையிலுள்ள ஏதேனும் உரத்தை விநியோகிக்க மறுக்கின்றாரோ ;

(எ) பதினைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் மீறுகையாக கலந்திளக்கப்பட்டதான ஏதேனும் உரத்தை விநியோகிக்கின்றாரோ அல்லது விநியோகிக்க முனைகின்றாரோ ;

(ஏ) பதினைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் மீறுகையாக கலந்திளக்கப்பட்டதான உரத்தை ஏற்றியிறக்குகின்றாரோ ;

(ஐ) எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் 16 ஆம் பிரிவின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவரைத் தடை செய்கின்றாரோ அல்லது தடுக்கின்றாரோ;

(ஒ) பதினெட்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையாக உரத்தை இறக்குமதி செய்பவர், உற்பத்தி செய்பவர், வகுத்தமைப்பவர் அல்லது விநியோகிப்பவர் என்றல்லாமல் அவரது தேவைப் பாடுகளுக்கு மிகையானளவு உரத்தைத் தமது உடைமையில் வைத்திருக்கின்றாரோ ;

(ஓ) பத்தொன்பதாம் பிரிவில் விபரிக்கப்பட்ட அங்கிகாரத்தைப் பெறாது ஏதேனும் உரத்தை வகுத்தமைக்கின்றாரோ ; அல்லது

(ஔ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் ஒழுங்குவிதியுடன் இணங்கி யொழுகுகின்றாரோ

அந்த ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

22. இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியான ஒவ்வோர் ஆளும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப் பணமொன்றிற்கும் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டுமென்பதுடன் இரண்டாவது அல்லது அடுத்த தவறொன்றின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். தண்டனைகள்.

23. இருபத்தோராம் பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஏ) என்னும் பந்தியின்கீழ் தவறொன்றுக்கு எவரேனும் ஆளுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கும் நீதிமன்றமானது, 22 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்படக் கூடியதான ஏதேனும் தண்டனைக்கு மேலதிகமாக, கலப்படம் செய்யப்பட்ட எந்த உரம் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்தக் கலப்படம் செய்யப்பட்ட உரத்தைப் பறிமுதல் செய்யும்படி கட்டளையிடலாம். பறிமுதல் செய்யுமாறு கட்டளையிடுவதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம்.

24. (1) இருபத்துமூன்றாம் பிரிவின்கீழ் பறிமுதல் செய்யப்பட்டதான கலப்படம் செய்யப்பட்ட ஏதேனும் உரம் அவ்வாறு பறிமுதல் செய்யப்படுவதன் மேல் முற்றிலும் அரசுக்கு உரித்தானதாதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்கலானது— பறிமுதல் செய்யப்பட்ட உரத்தைக் கையுதிர்த்தல்.

(அ) பறிமுதல் செய்யும் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எக்காலப் பகுதிக்குள் மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருக்கக்கூடுமோ அக்காலப்பகுதி முடிவடைந்த பின்னர் ; அல்லது

(ஆ) பறிமுதல் கட்டளைக்கெதிரான மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, பறிமுதல் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது ஏற்றுக்கொள்ளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்தின்மீது பயனுறுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்டதான கலப்படம் செய்யப்பட்ட ஏதேனும் உரத்தின் உடைமையை ஏற்றல் வேண்டும்; என்பதுடன் அத்தகைய உரத்தை அவர் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு கையுதிர்த்தலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகள் தொடுத்தல்.

25. இச்சட்டத்தின் கீழான அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்கான குற்ற வழக்கொன்று பணிப்பாளரின் எழுத்திலான அனுமதி வாயிலாகவும் அத்துடன் அத்தகைய அனுமதியுடன் தவிரவும் தொடுக்கப்படுதலாகாது.

ஆட்கள் குழுவினால் புரியப்படும் தவறுகள்.

26. இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் ஆட்கள் குழுவொன்றினால் ஏதேனும் தவறு புரியப்படுமிடத்து—

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் தவறு புரியப்பட்ட காலத்தில் எந்த ஆள் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொருவராக அல்லது அலுவலராக இருக்கின்றாரோ அந்த ஆளொவ்வொருவரும்; அல்லது

(ஆ) ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று தவிர்ந்த குழுவொன்றாயின், தவறு புரியப்பட்ட காலத்தில் அக்குழுவின் உறுப்பினரொருவராக இருந்த ஆளொவ்வொருவரும்

அந்தத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய பணிப்பாளர், அலுவலர், அல்லது உறுப்பினர், தவறானது தாம் அறியாமலே புரியப்பட்டது என்று அல்லது அவரது பணிகளின் இயல்பை கருத்திற்கொண்டு அச் சூழ்நிலைகளில் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுக்க தாம் பிரயோகிக்க வேண்டிய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென ஏண்பித்தால் அவர் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

27. இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் ஆளெவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக தொடர்ச்சி, குற்ற வழக்கு, அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

ஒழுங்குவிதிகள்.

28. (1) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதனகத்துக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகை பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர், வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்பு கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியில் இருந்து ஆனால் அதன்கீழ் முன்னதாக ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமோ அந்தத் தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

29. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி— பொருள் கோடல்.

"விநியோகித்தல்" என்பது விற்றல் என்பதை உள்ளடக்குகின்றதுடன் அதன் இலக்கண வேறுபாடுகளும் ஓரினச் சொற்றொடர்களும் முறையே அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

"உரம்" என்பது தாவர போஷாக்குக்குப் பயன்படுவதும், தாவர வளர்ச்சியை மேம்படுத்துவதில் பயன்பாட்டுக்கென உருவமைக்கப்பட்ட அல்லது பெறுமதிவாய்ந்ததெனக் கோரப்பட்ட ஒரு அல்லது பல அங்கீகரிக்கப்பட்டனவான தாவரப் போஷாக்குகளைக் கொண்ட ஏதேனும் பதார்த்தம் என்று பொருள்படும். ஆனால் கையாளப்படாத விலங்கு அல்லது தாவரப் பசளையை உள்ளடக்காது ;

"வகுத்தமைத்தல்" என்பது உரம் தொடர்பில் உரத்தின் வெவ்வேறு சேர்வைப் பொருள்களை ஒன்றுசேர்த்தல் அல்லது கலத்தல் என்று பொருள்படும் ; அத்துடன்

"வகுத்தமைப்பவர்" என்பது உரத்தை வகுத்தமைத்தலில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள் என்று பொருள்படும்.

## அட்டவணை

### உரத்தை இறக்குமதி செய்வதற்தான உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்

1. உரிமமானது, கைமாற்றப்படற்பாலதாகாதென்பதுடன், எந்த ஆளுக்கு அது வழங்கப்பட்டதோ அந்த ஆள் தவிர்ந்த ஆளெவரினதும் நன்மைக்காக அது பயன்படுத்தப்படுதலுமாகாது.

2. உரிமம் பெற்றவரொவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை அவரது தொழிலிடத்தில் துலாம்பரமான இடமொன்றில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

3. உரிமம் பெற்றவர், போதியளவான குதத்திலிடும், களஞ்சியப்படுத்தும் இட வசதி பற்றிய எண்பிப்பைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

4. உரிமம் பெற்றவர், பணிப்பாளரின் முன்னைய அங்கீகாரமின்றி, அவ்வுரிமத்தால் மேவப்பட்டதான தொழிலின் அக்கறையெதனையும் விற்றல், கைமாற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் அல்லது அத்தொழில் தொடர்பாக வேறெவரேனும் ஆளுடன் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையால் அத்தகைய தொழிலில் அத்தகைய வேறு ஆள் ஒரு சொத்துவ அக்கறையை கொள்ளுகின்றதான உடன்படிக்கை எதனையும் செய்தலோ ஆகாது.

5. உரிமம் இழக்கப்படும் சந்தர்ப்பத்தில், சமாதான நீதிவானெருவரால் இழப்பு உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசியொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் மீதும், விதித்துரைக்கப்பட்ட உரிமக் கட்டணத்தில் அரைவாசி செலுத்தப்பட்டதன்மீதும், அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று பணிப்பாளரால் வழங்கப்படுதல் வேண்டும்.

6. எந்த உரிமம்பெற்றவர், எந்தத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உரிமம் வழங்கப்பட்டதோ அந்தத் தொழிலைக் கொண்டு நடாத்தாதொழிகின்றரோ அல்லது அவரது தொழில் இடத்தை மாற்றுகின்றரோ அந்த உரிமம் பெற்றவரொவ்வொருவரும் அந்நிகழ்வு பற்றி பணிப்பாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

7. தனியாள் ஒருவருக்கு வழங்கப்பட்ட உரிமமானது, உரிமம் பெற்றவர் இறப்பதன்மேல் காலங்கடந்ததாதல் வேண்டும்.

8. கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு வழங்கப்பட்ட உரிமமானது, அக்குழு குலைக்கப்பட்டதன்மேல் காலங்கடந்ததாதல் வேண்டும்.

9. இந்த உரிமம் தொடர்பிலான எல்லா அறிவித்தல்களும், அவை அப்போதைக்குத் தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு அஞ்சல்மூலம் அனுப்பப்பட்டால் அல்லது ஒப்படைக்கப்பட்டால் அல்லது அந்த இடத்தில் கதவில் அல்லது படலையில் ஒட்டப்பட்டால் அத்தகைய அறிவித்தல்கள் உரிமம் பெற்றவருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

10. உரிமத்திற்கான விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல் பொய்யானதாகவும் திருத்தமானதாயும் காணப்பட்டால், உரிமமானது இல்லாதாக்கப்படுவதற்குள்ளாதலும் வேண்டும்.

உரத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்

1. உரிமமானது கைமாற்றப்படற்பாலதாதலாகாதென்பதுடன், எந்த ஆளுக்கு வழங்கப்பட்டதோ அந்த ஆள் தவிர்ந்த ஆளொருவரினதும் நன்மைக்காக அது பயன்படுத்தப்படுதலுமாகாது.

2. உரிமம் பெற்றவரொவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை அவரது தொழிலிடத்தில் துலாம்பரமான இடமொன்றில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

3. உரிமம் பெற்றவர், பணிப்பாளரின் முன்னைய அங்கீகாரமின்றி, அவ்வுரிமத்தால் மேவப்பட்டதான தொழிலின் அக்கறையெதனையும் விற்றல், கைமாற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ அல்லது அத்தொழில் தொடர்பாக வேறெவரேனும் ஆளுடன் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையால் அத்தகைய தொழிலில் அத்தகைய வேறு ஆள் ஒரு சொத்துவ அக்கறையைக் கொள்ளுகின்றதான உடன்படிக்கை எதனையும் செய்தலோ ஆகாது.

4. உரிமம் இழக்கப்படும் சந்தர்ப்பத்தில். சமாதான நீதிவானெருவரால் இழப்பு உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசியொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் மீதும், விதித்துரைக்கப்பட்ட உரிமக் கட்டணத்தின் அரைவாசி செலுத்தப்பட்டதன்மீதும், அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று பணிப்பாளரால் வழங்கப்படுதல் வேண்டும்.

5. எந்த உரிமம்பெற்றவர், எந்தத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உரிமம் வழங்கப்பட்டதோ அந்தத் தொழிலைக் கொண்டு நடாத்தாதொழிகின்றரோ அல்லது அவரது தொழில் இடத்தை மாற்றுகின்றரோ அந்த உரிமம் பெற்றவரொவ்வொருவரும் அந்நிகழ்வு பற்றி பணிப்பாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

6. தனியாள் ஒருவருக்கு வழங்கப்பட்ட உரிமமானது, உரிமம் பெற்றவர் இறப்பதன்மேல் காலங்கடந்ததாதல் வேண்டும்.

7. கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு வழங்கப்பட்ட உரிமமானது, அக்குழு கலைக்கப்பட்டதன்மேல் காலங்கடந்ததாதல் வேண்டும்.

8. எந்த வளவுகளில் உரம் உற்பத்தி செய்யப்பட வேண்டுமோ அந்த வளவுகள் பற்றிய விபரங்கள் உரிமம் பெற்றவரால் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

9. உரிமம் பெற்றவர், உரிமத்தில் குறிப்பிட்டப்பட்ட வளவுகளில் மாத்திரம் உற்பத்தி நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

10. இந்த உரிமம் தொடர்பிலான எல்லா அறிவித்தல்களும், அவை அப்போதைக்குத் தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு அஞ்சல்மூலம் அனுப்பப்பட்டால் அல்லது ஒப்படைக்கப்பட்டால் அல்லது அந்த இடத்தில் கதவில் அல்லது படலையில் ஒட்டப்பட்டால் அத்தகைய அறிவித்தல்கள் உரிமம் பெற்றவருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

11. உரிமத்திற்கான விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல் பொய்யானதாகவும் பிழையானதாயும் காணப்பட்டால், உரிமமானது இல்லாதாக்கப்படுவதற்குள்ளாதல் வேண்டும்.

---

உரத்தை வகுத்தமைப்பதற்கான உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்

1. உரிமமானது கைமாற்றப்படற்பாலதாதலாகாதென்பதுடன், எந்த ஆளுக்கு அது வழங்கப்பட்டதோ அந்த ஆள் தவிர்ந்த ஆளெவரினதும் நன்மைக்காக அது பயன்படுத்தப்படுதலுமாகாது.

2. உரிமம் பெற்றவரொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை அவரது தொழிலிடத்தில் துலாம்பரமான இடமொன்றில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

3. உரிமம் பெற்றவர் பணிப்பாளரின் முன்னைய அங்கீகாரமின்றி, அவ்வுரிமத்தால் மேவப்பட்டதான தொழிலின் அக்கறையெதனையும் விற்றல், கைமாற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் அல்லது அத்தொழில் தொடர்பாக வேறெவரேனும் ஆளுடன் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையால் அத்தகைய தொழிலில் அத்தகைய வேறு ஆள் ஒரு சொத்துவ அக்கறையைக் கொள்ளுகின்றதான உடன்படிக்கை எதனையும் செய்தலோ ஆகாது.

4. உரிமம் இழக்கப்படும் சந்தர்ப்பத்தில். சமாதான நீதிவானொருவரால் இழப்பு உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசியொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் மீதும், விதித்துரைக்கப்பட்ட உரிமக் கட்டணத்தில் அரைவாசி செலுத்தப்பட்டதன்மீதும், அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று பணிப்பாளரால் வழங்கப்படுதல் வேண்டும்.

5. எந்த உரிமம்பெற்றவர், எந்தத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உரிமம் வழங்கப்பட்டதோ அந்தத் தொழிலைக் கொண்டு நடாத்தாதொழிகின்றாரோ அல்லது அவரது தொழில் இடத்தை மாற்றுகின்றாரோ அந்த உரிமம் பெற்றவரொவ்வொருவரும் அந்நிகழ்வு பற்றி பணிப்பாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

6. தனியாள் ஒருவருக்கு வழங்கப்பட்ட உரிமமானது, உரிமம் பெற்றவர் இறப்பதன்மேல் காலங்கடந்ததாதல் வேண்டும்.

7. கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு வழங்கப்பட்ட உரிமமானது, அக்குழு கலைக்கப்பட்டதன்மேல் காலங்கடந்ததாதல் வேண்டும்.

8. எந்த வளவுகளில் உரமானது வகுத்தமைக்கப்படவேண்டுமோ, அந்த வளவுகள் பற்றிய விபரங்கள் உரிமம் பெற்றவரால் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

9. உரிமம் பெற்றவர், உரிமத்தில் குறிப்பிடப்பட்ட அமைவிடத்தில் அல்லது அமைவிடங்களில் மாத்திரம் உர வகுத்தமைப்பை மேற்கொள்ளுதல் வேண்டும்.

10. இந்த உரிமம் தொடர்பிலான எல்லா அறிவித்தல்களும், அவை அப்போதைக்குத் தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு அஞ்சல்மூலம் அனுப்பப்பட்டால் அல்லது ஒப்படைக்கப்பட்டால் அல்லது அந்த இடத்தில் கதவில் அல்லது படலையில் ஒட்டப்பட்டால் அத்தகைய அறிவித்தல்கள் உரிமம் பெற்றவருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

11. உரிமத்திற்கான விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல் பொய்யானதாகவும் திருத்தமானதாயும் காணப்பட்டால், உரிமமானது இல்லாதாக்கப்படுவதற்குள்ளாதலும் வேண்டும்.